**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – சிறப்புப் பள்ளிகள் – பார்வையற்றோருக்கான அரசுப் பள்ளிகள் – 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு டிவிடி பிளேயர் (DVD Player) வழங்குதல் – 2016–2017 ஆம் ஆண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் ரூ.7,28,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை

அரசாணை (1டி) எண்: 79

நாள்: 15.11.2016
துன்முகி – ஐப்பசி 30
திருவள்ளுவர் ஆண்டு, 2047

படிக்க:

1. அரசாணை (1டி) எண் 59, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 28.12.2015.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதம் எண் 2844/சிப3/2016, நாள் 14.07.2016.

----

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2015–2016ஆம் ஆண்டிற்கு, அரசு பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில், 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் 108 மாணவ / மாணவியருக்கு டிவிடி பிளேயர் (DVD Player) உடன் ஹெட்போன் (Head Phone) வாங்கி வழங்குவதற்கு திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.5,61,600/– (ரூபாய் ஐந்து இலட்சத்து அறுபத்தோறாயிரத்து ஆறுநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், அரசு பார்வையற்றோர் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு 2016–2017ஆம் நிதியாண்டிற்கு, டிவிடி பிளேயர் (DVD Player) உடன் ஹெட்போன் (Headphone) வாங்கி வழங்குவதற்கு, கீழ்கண்ட விவரப்படி ரூ,7,70,000/– நிதி ஒதுக்கீடு செய்து, திட்டத் தொடராணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்:–

| வ. எண் | பள்ளியின் பெயர் | 10ம் வகுப்பு மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை | 12ம் வகுப்பு மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | பார்வையற்றோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளி, தஞ்சாவூர். | 26 | 27 | 53 |
| 2. | பார்வையற்றோருக்கான அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சி | 18 | 25 | 43 |
| 3. | பார்வையற்றோருக்கான அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி | 22 | 22 | 44 |
| | **மொத்தம்** | **66** | **74** | **140** |

குறைந்த விலைப் புள்ளியின் ஒரு DVD பிளேயர் விலை – ரூ.5,500/–
140 DVD பிளேயர் மொத்த விலை (140 x 5,500) = ரூ.7,70,000/–

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை பரிசீலனை செய்து, பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில், 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு 2016–2017ஆம் நிதியாண்டிற்கு DVD பிளேயர் உடன் ஹெட்போன் (Headphone) வாங்கி வழங்குவதற்கு திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.7,28,000/– (ரூபாய் ஏழு இலட்சத்து இருபத்தெட்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

**"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன் – I–திட்டத்தில் சேராதது – AA–பார்வையற்றோர் பள்ளி – 24–பொருள்களும் வழங்கலும்".**

**(து.தொ.கு 2235 02 101 AA 2407)**

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.16,000/– 2016–2017ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். அத்தகைய நிதியொதுக்கத்தினை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது. 2016–2017ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதி (ச.ந.)த் துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல்சாரா எண் 56159/நிதி(சந)/2016, நாள் 08.11.2016–இல் பெறப்பட்ட இசைவுடன் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 1098 (ஆயிரத்து தொன்னூற்று எட்டு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தஞ்சாவூர், திருச்சி மற்றும் திருவள்ளூர்.
மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர்கள், தஞ்சாவூர், திருச்சி மற்றும் திருவள்ளூர்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

நகல்:

நிதித் [ச.ந./வ.செ.பொ.II] துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
15/11/16